## பெருநகர சென்னை மாநகராட்சி
## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 69** **நாள்: 22.06.2017**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சியில் குப்பைகளை கையாளும் பணியை தனியார் மயமாக்குதல் குறித்து பொதுமக்களுடன் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற உள்ளது</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியின் குப்பை கையாளும் பணியினை தனியார் மயமாக்குதலின் ஒருபகுதியாகவும், பொதுமக்களிடமிருந்து திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் குப்பை பதனிடும் மையம் / குப்பை சேகரிக்கும் வளாகத்திற்கு திடக்கழிவுகளை எடுத்துச் செல்லல் என்ற தனியார் கலந்தாலோசனையாளர் 1 மற்றும் 2 திட்டக்கூறுக்கான கருத்துக்கள் பகிர்ந்தளித்தல் மற்றும் கலந்தாலோசனை வழங்குதலுக்காக பொதுமக்களுக்கான பங்களிப்பு கூட்டம் 27.06.2017 அன்று காலை 11.00 மணியளவில் திருவொற்றியூர், மணலி, மாதவரம் மற்றும் அம்பத்தூர் ஆகிய மண்டலங்களுக்கு வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள் தலைமையில் உமியா மகால் கல்யாண மண்டபம், எண்.7, 200 அடி உள்வட்ட சாலை, ரெட்டேரி அருகில், பொன்னியம்மன் மேடு, சென்னை–600 110ல் நடைபெற உள்ளது,

மேலும், வளசரவாக்கம், ஆலந்தூர், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய மண்டலங்களுக்கு 27.06.2017 அன்று மாலை 3.00 மணியளவில் தெற்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள் தலைமையில் கூட்டுறவு சங்க கட்டம் எண்.1 / 700 ஏ, கார்த்திகேயபுரம் 2வது குறுக்குத் தெரு, மடிப்பாக்கம், (மடிப்பாக்கம் பேருந்து நிலையம்) சென்னை–600 091லும் நடைபெற உள்ளது.

பொதுமக்கள் அனைவரும் வருகைபுரிந்து தங்கள் கருத்துக்களை எடுத்து கூறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**